(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

NFWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## முதலாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 1St Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளியல்<br>Economics | Three Hours<br>Gr -12 (2024) | 21 | T | I,II |

**அறிவுறுத்தல்கள் :-**

- ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
- ***விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.***
- ***1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.***

## பகுதி – I

1. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் நெறியுறைப் பொருளியல் கூற்று எது?
   (1) பொருளியல் கோட்பாடுகள் குறிப்பிடுகின்றன நிறுவனங்கள் இலாப உச்சப்படுத்தலை நோக்காகக் கொண்டவை என்று.
   (2) பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கென்று மனிதனால் வழங்கப்படும் பங்களிப்பு ஊழியம் ஆகும்.
   (3) உற்பத்தியாளனும் நுகர்வோனும் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அமையச்செலவினைக் கருத்தில் கொள்கின்றனர்
   (4) அரசாங்கம் கட்டாயம் சந்தையில் தலையிட வேண்டும்.
   (5) உற்பத்திக்கென்று மனிதனால் உருவாக்கப்படும் பொருட்களும் சேவைகளும் மூலதனமாகும்.

2. அனைத்துப் பொருளாதாரங்களும் எதிர்நோக்குகின்ற அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள்
   (1) எதனை எந்தளவு உற்பத்தி செய்தல்?எவ்வாறு உற்பத்தி செய்தல்? யாருக்காக உற்பத்தி செய்தல்?
   (2) அதிகளவு வளங்கள் வேலையற்றறிருத்தல்.
   (3) நுகர்வின் போதும் உற்பத்தியின் போதும் தனிப்பட்ட செலவுக்கும் சமூகச் செலவுக்கும் முகங்கொடுக்க வேண்டியிருத்தல்.
   (4) சமூக நலனுக்காக வருமானச் சமபங்கீட்டை மேற்கொள்ள வேண்டியேற்படல்.
   (5) வாழ்க்கைத்தரம் பாதிப்படையாதிருக்க ஓய்வூதியம் மற்றும் நலன்புரிச் செலவுகளை அதிகரிக்க வேண்டி ஏற்படல்.

3. சமூகத்தின் பொருளாதார நடத்தையுடன் மிகவும் தொடர்புடையது
   (1) நாணயக் கட்டுப்பாட்டினை மத்தியவங்கி மேற்கொள்ளல்.
   (2) பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்தல்
   (3) தனியார்மயப்படுத்தல்.
   (4) தனியார்துறையினரதும் அரச துறையினதும் செயற்பாடு காணப்படல்.
   (5) பொருளாதாரத்தில் வியாபார செயற்பாடுகளின் போது அரச தலையீடு காணப்படல்.

4. ஒரு பொருளாதாரப் பண்டமாகக் கருதப்படும் எந்தவொரு பொருளும்
   (1) மனித விருப்பங்களைத் திருப்திப்படுத்தும்.
   (2) அது அருமையாக இருப்பதுடன் உற்பத்திச் செலவினையும் கொண்டிருக்கும்.
   (3) அது அரசாங்கத்தினால் நிரம்பல் செய்யப்படும்.
   (4) அது கேள்வியினைக் கொண்டதாகக் காணப்படும்.
   (5) அது வரையறுக்கப்படாததாகக் காணப்படும்.

(All Rights Reserved/ *முழுப்பதிப்புரிமை உடையது*)

5. பொதுவேலையின்மையிலுள்ள வளங்களுக்கான அமையச்செலவு
   (1) நேர்கணிய பெறுமதியுடைது.
   (2) எதிர்கணிய பெறுமதியுடைது.
   (3) பூச்சியப் பெறுமதியுடைது.
   (4) மறை ஒன்றிற்குச் சமமானது.
   (5) நேர் ஒன்றிற்குச் சமமானது.

6. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் எது உற்பத்திக்காரணியாகிய மூலதனத்திற்குப் பொருத்தமான உதாரணம் ஆகும்.
   (1) வங்கிக்கடன்
   (2) பங்குகள்
   (3) முறிகள்
   (4) திறைசேறி உண்டியல்
   (5) ஒரு வீதி அமைப்பு

7. பின்வருவனவற்றுள் எது பொருளாதாரவளத்தின் வகைக்குள் உள்ளடங்கக் கூடியது.
   (1) நுகர்வு
   (2) விளைதிறன
   (3) உற்பத்தி
   (4) முயற்சியானண்மை
   (5) பரிமாற்றம்

8. மாற்றுப்பயன்பாடுகளிடையே அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்வதற்கு விலைப்பொறிமுறை யினைப் பயன்படுத்தும் பொருளாதாரங்கள்
   (1) கட்டளைப் பொருளாதாரங்கள்
   (2) சந்தைப் பொருளாதாரங்கள்
   (3) கலப்பு பொருளாதாரங்கள்
   (4) எளிய பொருளாதாரங்கள்
   (5) மூடிய பொருளாதாரங்கள்

9. கலப்புப் பொருளாதாரமுறையில் தீர்மானம் எடுக்கும் முக்கிய மூன்று தரப்பினரும் யாவர்.
   (1) வீட்டுத்துறை,நிறுவனங்கள் மற்றும் வங்கிகள்
   (2) வீட்டுத்துறை, நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுத்துறை
   (3) வீட்டுத்துறை, நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்துறை
   (4) நிறுவனங்கள், அரசாங்கத்துறை மற்றும் கூட்டுறவுத்துறை
   (5) நிறுவனங்கள், அரசாங்கத்துறை மற்றும் வங்கிகள்


10. குறித்தவொரு சந்தர்ப்பத்தில் ஒரு தச்சுத்தொழிலாளி கதிரை மற்றும் மேசை ஆகிய இருபண்டங்களை உற்பத்தி செய்வதற்கான சேர்க்கைகள் வருமாறு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மேசை | **0** | **10** | **20** | **30** | **40** |
| கதிரை | **55** | **50** | **42** | **28** | **0** |

தற்பொழுது தச்சுத்தொழிலாளி மேசைகளில் 20 அலகுகளையும் கதிரையில் 42 அலகுகளையும் உற்பத்தி செய்கிறார் .மேலும் 10 அலகு மேசைகளை உற்பத்தி செய்வதற்கான அமையச்செலவு யாது?
   (1) 5 கதிரைகள்
   (2) 8 கதிரைகள்
   (3) 14 கதிரைகள்
   (4) 1.4 கதிரைகள்
   (5) 28 கதிரைகள்


11. தரப்பட்டுள்ள உற்பத்திசாத்திய வளையிகளில் எது சமமான பொருளாதாரவளர்ச்சியினைக் குறித்து நிற்கின்றது.

(1) நுகர்வுப் பொருட்கள்




மூலதனப் பொருட்கள்

(2) நுகர்வுப் பொருட்கள்




மூலதனப் பொருட்கள்

(3) நுகர்வுப் பொருட்கள்




மூலதனப் பொருட்கள்

(4) நுகர்வுப் பொருட்கள்



மூலதனப் பொருட்கள்


(5) நுகர்வுப் பொருட்கள்



மூலதனப் பொருட்கள்

12. குறித்த பொருளாதாரத்தின் உற்பத்திசாத்திய வளையி வருமாறு தற்பொழுது சாத்திய வளையியின் மீதமைந்துள்ள Y புள்ளியில் உற்பத்தி நடைபெறுகின்றது.

மூலதனப் பொருட்கள்




நுகர்வுப்பொருட்கள்


உற்பத்திசாத்தியவளையியில் எத்தகைய தாக்கமும் ஏற்படாதவகையில் தற்பொழுது மூலதனப் பொருட்கள் சார்பான உற்பத்தி அதிகரிக்குமாயின் கீழே தரப்பட்டுள்ள , (1),(2), (3),(4) அல்லது (5) எச்சோர்க்கை பெரும்பாலும் நிகழக்கூடும்.

| | குறுங்காலத்தில் நுகர்வுப் பொருட்களில் ஏற்படும் மாற்றம் | நீண்டகாலத்தில் நுகர்வுப் பொருட்களில் ஏற்படும் மாற்றம் |
|---|---|---|
| (1) | அதிகரிப்பு | அதிகரிப்பு |
| (2) | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| (3) | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| (4) | வீழ்ச்சி | அதிகரிப்பு |
| (5) | வீழ்ச்சி | மாற்றமில்லை |

13. பின்வருவனவற்றுள் குறித்த பண்டத்தின் கேள்வி எழுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணி ஆகும்.
(1) நலன்
(2) விளம்பரம்
(3) மொத்த நிரம்பல்
(4) கொள்வனவு ஆற்றல்,கொள்வனவுத்திட்டம் பொருட்கள் சேவைகள் மீதான தேவை
(5) சுவை

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

14. குறித்த பண்டம் சீனி எனக் கருதுக. பண்டத்தின் கேள்விக்கோடு **DD** யிலிருந்து $D_1D_1$ என நகர்வடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணி




(1) சீனியின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு.
(2) சீனியின் நிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பு
(3) சீனி உடல் நலத்திற்குக் கேடானது என்ற வைத்திய அறிக்கை.
(4) இனிப்புப் பண்ட உற்பத்திக்கு சீனி அதிகம் பயன்படுத்தப்படல்
(5) பால்மா பைக்கற்றுக்களின் விலைகள் பாரியளவு வீழ்ச்சியடைதல்.

15. குறித்த பண்டத்தின் விலைமாற்றத்தின் போதான பதிலீட்டு விளைவு என்பது குறித்து நிற்பது.
(1) வருமானம் உள்ளடங்களான ஏனைய காரணிகள் மாறாத போது குறித்தபண்டத்தின் விலை மாற்றமடைவதால் தொடர்புடைய ஏனைய பண்டங்களின் சார்புவிலை மாற்றமடைவதால் குறித்த பண்டத்தின் கேள்வித்தொகை மாற்றமடைதல்.
(2) வருமானம் உள்ளடங்களான ஏனைய காரணிகள் மாறாத போது குறித்தபண்டத்தின் விலை மாற்றமடைவதால் குறித்த பண்டத்தின் கேள்வித்தொகை மாற்றமடைதல்.
(3) பயன் மாற்றமடையாத போது குறித்தபண்டத்தின் விலை மாற்றமடைவதால் குறித்த பண்டத்தின் கேள்வித்தொகை மாற்றமடைதல்.
(4) மெய்வருமானம் ,கருத்தில் கொள்ளப்படும் பண்டத்தின் விலை உள்ளடங்களான ஏனைய காரணிகள் மாறாத போது குறித்தபண்டத்தின் பதிலீட்டுப்பண்டத்தின் விலை மாற்றமடைவதால் குறித்த பண்டத்தின் கேள்வித்தொகை மாற்றமடைதல்.
(5) தொடர்புடைய ஏனைய பண்டங்கள் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டபண்டங்களின் விலை மாற்றமடைவதால் குறித்த பண்டத்தின் கேள்வித்தொகை மாற்றமடைதல்.

16. குறித்த பண்டத்தின் கேள்வித்தொகை என்பதால் கருதப்படுவது.
(1) குறித்த விலையில் நுகர்வோன் கொள்வனவு செய்யத்தயாரான அளவு
(2) குறித்த வருமான மட்டத்தில் நுகர்வோன் சுதந்திரமாகக் கொள்வனவு செய்யத்தயாரான அளவு
(3) நுகர்வோன் சுதந்திரமாக கொள்வனவு செய்ய திட்டமிட்டுள்ள அளவுகள்..
(4) இது எப்பொழுதும் சமநிலைத்தொகைக்கு சமமாகக் காணப்படும்.
(5) பல்வேறுபட்ட விலைகளின் கீழ் நுகர்வோன் கொள்வனவு செய்யத்தயாரான அளவுகள்.

17. குறித்த பண்டத்தின் விலை ரூபா 10 இருந்து 15ரூபாவாக அதிகரிக்கும் போது கேள்வித்தொகை20 அலகுகளிலிருந்து 10 அலகுகளாக மாற்றமடையுமாயின் வில்முறையில் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியை மதிப்பிட்டால் அது
(1) 0 (2) - 0.5 (3) -1 (4) -1.66 (5) -2.4

18. பொருளாதாரத்தின சராசரி வருமானம் 5% இனால் வீழ்ச்சியடைந்தால் வெளிநாடுகளுக்குச் சுற்றுலா செல்வதற்கான கேள்வி 20% இனால் குறைவடைந்தது எனின் வெளிநாடுகளுக்குச் சுற்றுலா செல்வதற்கான வருமானம்சார் கேள்விநெகழிச்சி
(1) + 4.0 (2) (-4.0) (3) + 0.25 (4) -0.25 (5)+ 0.225

19. டீசலுக்கான விலையில் ஏற்படும் அதிகரிப்பு பின்வரும் எதன் விலையில் அதிகரிப்பினை ஏற்படுத்தும்
(1) பெற்றோல் (2) L.P காஸ் (L.P gas)
(3) இயந்திர எண்ன்ணெய் (Engine oil) (4)பொதுப் போக்குவரத்து
(5) பிஸ்கட்

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

20. இழிவுப்பண்டங்களானவை
(1) குறைந்த தரமுடைய பொருட்களாகும்.
(2) உயர்ந்த தரமுடைய பொருட்களாகும்.
(3) மிகக் குறைந்த வருமானம் பெறும் மக்கயளால் நுகரப்படும் பொருட்கள் ஆகும்.
(4) குறித்த நுகர்வோனின் வருமானம் அதிகரிக்கும் போது பண்டத்தின் கேள்வி குறைவடையும்
(5) வேறுநாட்டிலிருந்து அபிவிருத்தயடையாத நாடுகளால் இறக்குமதி செய்யப்படுபவை

## பகுதி - II

♦ **அறிவுறுத்தல் : விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

01. 1. அருமையென்றால் என்ன? பொருளாதாரங்களில் அருமைப்பிரச்சினை ஏன் உருவாகின்றது.? (4புள்ளிகள்)
2. அமையச்செலவு என்னும் பதத்தினை விளக்குக? (4புள்ளிகள்)
3. உற்பத்திக்காரணிகள் நான்கையும் குறிப்பிட்டு அவற்றிற்கான சன்மானங்களைக் குறிப்பிடுக? (4புள்ளிகள்)
4. தெரிவு என்பதனை விளக்குக.? (4புள்ளிகள்)
5. இலவசப்பண்டம் என்பதனை விளக்குக? (4புள்ளிகள்)

02. 1. பொருளாதரவளத்திற்கும் பொருளாதாரமல்லாவளத்திற்குமிடையேயான வேறுபாட்டை விளக்குக? (4புள்ளிகள்)
2. பொருளியலில் பணமானது ஏன் மூலதனமாகக் கருதப்படுவதில்லை ? (4புள்ளிகள்)
3. மீளும் வளத்திற்கும் மீளாவளத்திற்குமான வேறுபாட்டினை விளக்குக? (4புள்ளிகள்)
4. முயற்சியாண்மையின் பிரதான தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக. (4புள்ளிகள்)
5. நிலத்தின் பொருளியல் பண்புகளைக் குறிப்பிடுக? (4புள்ளிகள்)

03. 1. பொருளாதார முறைமையொன்றின் தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக? (3புள்ளிகள்)
2. பொருளாதார முறைமைகள் வேறுபடுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக? (4புள்ளிகள்)
3. சந்தைப்பொருளாதாரத்தில் விலைகளின் தொழிற்பாட்டைக் குறிப்பிட்டு விளக்குக. (3புள்ளிகள்)
4. இலங்கைப் பொருளாதாரம் கலப்புப் பொருளாதாரமாகக் கருதப்படுவது ஏன்? (5புள்ளிகள்)
5. சந்தைப் பொருளாதாரம் எப்பொதும் அருமையான சாதனங்களை திறமையாக ஒதுக்கீடு செய்யுமா? விளக்குக? (5புள்ளிகள்)

4. குறித்த X பொருளாதரம் தன்னிடம் உள்ள வளங்களைப்பயன்படுத்தி நெல் மற்றும் கரும்பு ஆகிய இரு பண்டங்களை உற்பத்தி செய்கின்றது எனக் கருதுக.வளங்கள் முழுவதும் திறமையாகப் பயன்படுத்தப்பட்டால் வருடாந்தம் நெல் உற்பத்தியில்100000 மெற்றிக் தொன்களை அல்லது கரும்பில் 500000 மெற்றிக் தொன்களை உற்பத்தி செய்யமுடியும்.
(அ). வளங்கள் முழுவதும் திறமையாகப் பயன்படுத்தப்படுகின்றது எனக் கருதி உற்பத்தி சாத்திய வளையியை வரைந்து ஒரு அலகு நெல்லுக்கான அமையச் செலவைக் கணிக்குக. (4புள்ளிகள்)
(ஆ). மேற்படி சாத்திய வளையிக்கான எடுஏகாள்கள் எவை? (4புள்ளிகள்)
2. அதிகரிக்கும் சந்தர்ப்பச்செலவு தொழிற்படும் பொருளாதாரம் ஒன்றில் பின்வரும் விடயங்களை சாத்திய வளையியன் துணை கொண்டு விளக்குக.
(அ) பொருளாதாரப் பின்னடைவு
(ஆ) பொருளாதாரவளர்ச்சி
(இ) கீழுழைப்பு
(ஈ) சகல வளங்களினதும் உற்பத்தி விளைதிறன் அதிகரித்தல்.
(4X2 =8 புள்ளிகள்)
3. உற்பத்திசாத்தியவளையிவரைதல் தொடர்பான பிரதான எடுகோள்கள் எவை? (4புள்ளிகள்)

5. 1. குறித்த பண்டத்தின் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகளைக் குறிப்பிடுக (3புள்ளிகள்)
2. கேள்வி விதியினை விளக்குக ? (4புள்ளிகள்)
3. குறித்த பண்டத்தினகன் விலைமாற்றத்தின் வருமான விளைவு, பதிலீட்டுவிளைவு என்பவற்றை விளக்குக? (5புள்ளிகள்)
4. தனிநபர்கேள்வி மற்றும் சந்தைக்கேள்வி என்பவற்றை விளக்குக? (4புள்ளிகள்)
5. குறித்த பண்டத்தின் கேள்விக்கோடு நகர்வடைவதற்கு ஏதுவான காரணிகளைக் குறிப்பிடுக? (4புள்ளிகள்)

(All Rights Reserved/ *முழுப்பதிப்புரிமை உடையது*)

6\. 1. 1. குறித்த சந்தையின் தகவல்கள் உங்களுக்குத் தரப்படுகின்றது.

| விலை | கேள்வித் தொகை |
|---|---|
| 100 | 8 |
| 200 | 4 |

(a) கேள்விச் சமன்பாட்டை மதிப்பிடுக.? (4 புள்ளிகள்)
(b) விலை150 ரூபா எனின் கேள்வித்தொகை யாது? (2 புள்ளிகள்)
(c) விலை ரூபா 100 இல் புள்ளி முறையைப்பயன்படுத்தி கேள்விநெகிழ்ச்சியை மதிப்பிடுக (2 புள்ளிகள்)

2\. குறித்த பண்டத்தின் கேள்வி அதிகரித்த போது விலை அதிகரித்தது. மாறாக விலை அதிகரித்த போது கேள்வித் தொகை குறைவடைந்தது. மேற்படி இரு கூற்றுக்களையும் வரைபுகளின் உதவியுடன் விளக்குக (4புள்ளிகள்)

3\. விலைசார் கேள்விநெகிழ்ச்சி மற்றும் வருமானம்சார்கேள்வி நெகிழ்ச்சியின் நடைமுறை முக்கியத்துவத்தை விளக்குக? (4புள்ளிகள்)

4\. நிரம்பல் என்றால் என்ன ? (4புள்ளிகள்)